**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.366/2024**

2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 22ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.S.இராமச்சந்திரன், B.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - குமார் | **PW-4** | ஜாதி | ------------- |
| த/க பெயர் | - பெருமாள் | | தொழில் | - |
| கிராமம் | - | | சமயம் | - |
| தாலுக்கா | - | | வயது | - 45 |

**(எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை:-**

நான் லட்சுமி நகரில் குடியிருந்து ஜவுளி நகர் ஆர் எம் புதூர் பகுதியில் இருசக்கர வாகனம் பட்டறை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் காலை நேரத்தில் போலீசார் நான் கடையில் இருக்கும் பொழுது என்னிடம் ஒரு பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். சம்பவம் நடந்த இடத்தை மேப் போட்டு வரைந்ததில் என்னிடம் கையெழுத்து பெற்றார்கள் வேறு எதுவும் தெரியவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து **அ.சா.ஆ.**2. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

11.9.2020 அன்று மதியம் 12:15 மணியளவில் சித்தோடு காவல் நிலைய காவல் ஆய்வாளர் இவ்வழக்கில் சம்பவ இடத்தை என் முன்பாகவும் சாட்சி தென்னரசு என்பவர் முன்பாகவும் பார்வையிட்டு மேற்படி விபத்து நடந்த இடத்தை பொறுத்து பார்வை மகஜர்

மற்றும் வரைபடம் தயாரித்ததாகவும் அதில் நானும் மேற்படி தென்னரசு என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டதாகவும் என்னை போலீசார் விசாரித்ததாகவும் தற்பொழுது அதை மறைத்து எதிரிக்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றார் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

குறுக்கு விசாரணை இல்லை.